புரட்சிப் **பெரியார் முழக்கம்**
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | அக்டோபர் 07, 2021 | புரட்சி 20 | முழக்கம் 32 | விலை: ரூ.3.00

# கோபி–பவானி–ஈரோட்டில் பெரியார் பிறந்த நாள் எழுச்சி






**ஈரோடு :** கோபி ஒன்றியம் அலிங்கியம் கிளை கழகத்தின் சார்பாக பெரியார் பிறந்தநாள் விழா மற்றும் சமூகநீதி நாள் உறுதியேற்பு விழா குருமந்தூர் பேருந்து நிறுத்தத்தில் கிளை செயலாளர்செந்தில் தலைமையில் நடைபெற்றது. அளுக்குளி கிளை கழகத்தின் சார்பாக பெரியார் பிறந்தநாள் விழா மற்றும் சமூகநீதி நாள் உறுதியேற்பு விழா அளுக்குளி பேருந்து நிறுத்தத்தில் கிளை செயலாளர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு அறிவியல் மன்றம் விஜயசங்கர், விஜயபிரகாஷ், அபிராமி, தி.மு.க. கவுன்சிலர் தங்கம் உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

சமூகநீதி நாள் உறுதியேற்பு நிகழ்வு கோபி பேருந்து நிலையத்தில் கோபி ஒன்றிய பொறுப்பாளர் அருளானந்தம் தலைமையில் நடைபெற்றது இதில் நகரப் பொறுப்பாளர்கள் ரகுநாதன், ஜெகநாதன் உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர். பவானி ஒன்றிய கழகத்தின் சார்பாக பெரியார் பிறந்தநாள் மற்றும் சமூகநீதி நாள் உறுதியேற்பு விழா பவானி பேருந்து நிலையத்தில் மாவட்ட செயலாளர் வேணுகோபால் தலைமையில் நடைபெற்றது. இதில் கிளை பொறுப்பாளர்கள் வினோத், சுதர்சன், அசோகன் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தோழர்கள் கலந்து கொண்டனர். நம்பியூர் ஒன்றியம் ஏலத்தூர் கிளை கழகத்தின் சார்பாக பெரியார் பிறந்தநாள் விழா மற்றும் சமூகநீதி நாள் உறுதியேற்பு விழா கிளை செயலாளர் அழகிரி தலைமையில் நடைபெற்றது. இதில் கிளை கழகத் தோழர்கள் செல்வக்குமார் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

அம்மாபேட்டை ஒன்றிய கழகத்தின் சார்பாக பெரியார் பிறந்தநாள் விழா மற்றும் அரசு அலுவலகங்களுக்கு பெரியார் படம் வழங்கும் விழா மாவட்ட தலைவர் நாத்திகஜோதி தலைமையில் நடைபெற்றது. இதில் ஒன்றிய பொறுப்பாளர்கள் வேல்முருகன், செல்வம் மற்றும் திராவிடர் கழக மாவட்ட தலைவர் பிரகலாதன் உள்ளிட்ட கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

கொளப்பலூர் கிளை கழகத்தின் சார்பாக பெரியார் பிறந்தநாள் விழா மற்றும் சமூகநீதி நாள் உறுதியேற்பு விழா கொளப்பலூர் பேருந்து நிறுத்தத்தில் மாநில வெளியீட்டு செயலாளர் ராம.இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது. இதில் கிளை பொறுப்பாளர்கள் முருகேசன், காமராஜ், பழனிசாமி, சுப்பிரமணி உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர். கோட்டுபுள்ளாம்பாளையம் கிளை கழகத்தின் சார்பாக பெரியார் பிறந்தநாள் விழா மற்றும் சமூகநீதி நாள் உறுதி யேற்பு விழா கொடியேற்றம் மற்றும் குடும்ப விருந்து கோட்டுபுள்ளாம் பாளையம் பகுதியில் கிளை செயலாளர் சூர்யாரகு தலைமையில் நடைபெற்றது. இதில் பூபதி, தேவராஜ், அழகுபூபதி, கதிர், நவீன் வேலு உள்ளிட்ட கிளை கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

நம்பியூர் ஒன்றிய கழகத்தின் சார்பாக தந்தை பெரியார் பிறந்தநாள் விழா மற்றும் ரமேஷ், புவி ஈ-சேவை மையம் திறப்பு விழா ஒன்றிய பொறுப்பாளர் ரமேஷ் தலைமையில் நடைபெற்றது. இதில் கழகத்தின் மாநில வெளியீட்டு செயலாளர் ராம. இளங்கோவன், தோழர்கள் அழகிரி, செல்வக்குமார், சத்தியராஜ், சித்ரா, கலை செல்வன் மற்றும் சமூகநீதி கட்சியின் பொறுப்பாளர் ராஜேந்திரன், தி.மு.க. ஒன்றிய செயலாளர் செந்தில்குமார் உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

சத்தி ஒன்றிய கழகத்தின் சார்பாக பெரியார் பிறந்தநாள் விழா புது வடவள்ளி சமத்துவபுரத்தில் ஒன்றிய பொறுப்பாளர் ஜீ.கே. மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு அறிவியல் மன்ற பொறுப்பாளர் முத்து, பழனிச்சாமி மற்றும் ஆதிதமிழர் பேரவை, கருஞ்சிறுத்தைகள், தலித் விடுதலை கட்சி, தமிழ்புலிகள் உள்ளிட்ட அனைத்து கட்சி தோழர்கள் கலந்து கொண்டனர்.

காசிபாளையம் கிளை கழகத்தின் சார்பாக பெரியார் பிறந்தநாள் விழா காசி பாளையம் பேருந்து நிறுத்தத்தில் தலைமை கழகப் பேச்சாளர் கா.சு. வேலுச்சாமி தலைமையில் நடைபெற்றது. இதில் பொறுப்பாளர்கள் கருப்பண்ணன், பழனிச்சாமி, சரவணன் மற்றும் தி.மு.க. தோழர்கள் கலந்து கொண்டனர்.

ஈரோடு தெற்கு மாவட்டத்தின் சார்பாக காலை 9 மணியளவில் ஈரோடு ப.செ பூங்கா பெரியார் சிலை வளாகத்தில் ஆசிரியர் சிவக்குமார் தலைமையில் கழகக் கொடியைத் தாங்கியும், முழக்கத்தை ஓங்கியொலித்தும் நாற்பத்தாறு தோழர்கள் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து, கழகம் வெளியிட்ட உறுதிமொழியை பேருவகையுடன் எடுத்துக் கொண்டார்கள்.

அதேபோல தந்தை பெரியார் இல்லத்திலும். கொல்லம்பாளையத்தில் கொடியேற்றி, படத்திறப்பு மற்றும் உறுதிமொழியேற்பு என பெரியார் பிறந்தநாள் விழா ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு நொடியிலும் மிக்க உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

மதியம் சித்தோடு கமலக்கண்ணன் இல்லத்தில் மதிய உணவுக்குப்பின் சித்தோடு சமத்துவபுரம் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தும் சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்றும் அங்கு வசிக்கும் மக்களுக்கு இனிப்பு வழங்கியும் தோழர்களுக்குள்ளே நெகிழ்வான உரையாடல்களோடு பெரியாரின் பிறந்தநாள் பொருள் பொதிந்தாக ஆக்கப்பூர்வமானதாக நிகழ்ந்து முடிந்தது.

**திண்டுக்கல்** மாவட்டம் பழனி ஆயக்குடி பகுதியில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் நான்கு இடங்களில் கொடியேற்றி தந்தை பெரியாரின் 143ஆவது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. நிகழ்வில் திண்டுக்கல் மாவட்ட அமைப்பாளர் மருதமூர்த்தி, ஆயக்குடி பகுதி அழகர்சாமி, வேல் சங்கர், ஆயுதன், கா.பெரியார், சு.க ணேசன், மார்க்சியம் கார்க்கி, கலைச் செல்வன் மற்றும் மாநில அமைப்பு செயலாளர் ஈரோடு ரத்தினசாமி, பரப்புரை செயலாளர் பால்



பிரபாகரன், பொருளாளர் திருப்பூர் துரைசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் விழுப்புரம் அய்யனார் சூலூர் பன்னீர் செல்வம், ஈரோட்டு கணேஷ், தமிழ்நாடு மாணவர் கழகப் பொறுப்பாளர் திருப்பூர் சந்தோஷ், அய்யப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து, திண்டுக்கல் மாவட்டம் பழனி பகுதி திராவிடர் விடுதலைக் கழக கலந்துரையாடல் கூட்டம் ஆயக்குடியில் 30.9.2021 அன்று நடைபெற்றது கூட்டத்திற்கு பொருளாளர் துரைசாமி தலைமை வகித்தார்.அமைப்பு செயலாளர் ரத்தினசாமியும் பரப்புரை செயலாளர் பிரபாகரன் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கழகத்தின் பரப்புரை மற்றும் செயல்பாடுகளைப் பற்றி தோழர்கள் தங்கள் கருத்துகளை பகிர்ந்து கொண்டனர். பின்பு கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒரு மனதாக நிறைவேற்றபட்டது.

1) திண்டுக்கல் மாவட்டம் திராவிடர் விடுதலைக் கழக அமைப்பாளர் தோழர் மருதமூர்த்தியின் தந்தையும் சீரிய பெரியாரியல் பற்றாருளருமான வண்டி வாய்க்கால் அ.கலையம்புத்தூர் சுப்பையா அவர்களின் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டு மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

2) பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியில் கலைஞரால் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்ட அனைத்து சாதியினரும் அர்ச்சகர் என்னும் திட்டடத்தை தற்பொழுது நடைமுறைபடுத்தியதின் மூலம் தந்தை பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றிய மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசுக்கு நன்றியும் பாராட்டுகளும் தெரிவிக்கப்பட்டது.

3) ஒவ்வொரு மாதமும் இரண்டாம் ஞாயிறு அன்று மாவட்ட, நகர, ஒன்றிய வாரியாக கலந்துரையாடல் கூட்டம் நடத்தி கூட்டத்தின் முடிவு படி இயக்கத்தை நடத்தி செல்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

4) கல்வி வேலைவாய்ப்பில் நாம் போராடி பெற்ற உரிமைகளை மோடி தலைமையிலான அரசு தொடர்ந்து கபளீகரம் செய்து வருவதோடு EWS என்னும் உயர் ஜாதி ஏழைகளுக்கு கவலைப்படும் இந்த மத்திய அரசு உழைக்கும் மக்களின் வேலை வாய்ப்புகளை பறிக்கும் நோக்கோடு எதிர்த்து தமிழ்நாடு அரசின் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருப்பதுடன் ஜாதிவாரி கணக்கெடுப்பு வேண்டும் எனும் கோரிக்கைக்கு அசடன் தன்முனைப்புடன் செயலாற்றுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

5) திராவிடர் விடுதலைக் கழகத்தின் இதழ்களான பெரியார் முழக்கம், நிமிர்வோம் இதழ்களை தோழர்கள் சந்தா செலுத்தி வாங்கி படிப்பதோடு தனது உறவினர்கள், நண்பர்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் சந்தாக்களை வரும் ஒரு மாத காலத்திற்கும் சேர்த்திட வேண்டும் எனவும் திர்மானிக்கப்படுகிறது.

புதிய பொறுப்பாளர்கள் நியமனம் : பழனி நகர அமைப்பாளர் அழகர்சாமி; ஆயக்குடி ஒன்றிய கிளை தலைவர் - பெரியார்; ஆயக்குடி ஒன்றிய கிளை செயலாளர் - சங்கர்.

தலையங்கம்

## ‘நீட்’ எதிர்ப்புக்கு மாநிலங்கள் குரல் கொடுக்க வேண்டும்

நீட் தேர்வுக்கு எதிரான போராட்டத்தை சட்டம் மற்றும் அரசியல் வழியாக முன்னெடுக்க வேண்டிய அவசியத்தை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் உணர்ந்து, 12 மாநில முதல்வர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார். இரண்டு முக்கிய கருத்துகளை அக்கடிதம் வலியுறுத்துகிறது. கல்வித் துறை நிர்வாகம் மாநில அரசுகளிடம் இருக்க வேண்டும்; அதற்குத் தேவையான முயற்சிகளில் மாநிலங்கள் ஒருங்கிணைந்து குரல் கொடுக்க முன் வர வேண்டும் என்று வலியுறுத்தும் அந்தக் கடிதம், நீட் தேர்வு வழியாக ஒன்றிய ஆட்சி கூட்டாட்சி தத்துவத்துக்கு எதிராக செயல்படுவதையும் சுட்டிக் காட்டுகிறது. பாராட்டி வரவேற்கப்பட வேண்டிய முதல்வரின் சிறப்பான முன்னெடுப்பு இது. சமூக நீதியின் பிறப்பிடமான தமிழ்நாடு மட்டும் தான், ‘நீட்’ ஒடுக்கப்பட்ட விளிம்பு நிலை சமூகத்து மாணவர்களின், மருத்துவக் கனவை சிதைக்கும் ஆபத்துகளை கவலையுடன் புரிந்து செயலாற்றி வருகிறது. ஏற்கனவே ஆட்சியிலிருந்தவர்கள் சடங்குக்காக ஒரு தீர்மானம் நிறைவேற்றி விட்டு அதை ஒன்றிய ஆட்சி புறந்தள்ளி தாக்கீது அனுப்பியதையும் கூட மறைத்து விட்டார்கள். தி.மு.க. ஆட்சி இதற்காக ஏ.கே. ராஜன் தலைமையில் குழு ஒன்று நியமித்து நீட் உருவாக்கிய பாதிப்புகளை புள்ளி விவரங்களுடன் ஆவணப்படுத்தியிருக்கிறது. இந்த அறிக்கையையும் தனது கடிதத்துடன் இணைத்து இதேபோல் ஒவ்வொரு மாநிலத்திலும் ஆராய்ந்தால் கிராமப்புற ஒடுக்கப்பட்ட மாணவர்களின் பாதிப்புகளை உணர முடியும் என்றும் முதல்வர் மு.க. ஸ்டாலின் சுட்டிக்காட்டியிருக்கிறார். மாநில முதல்வர்களிடம் இக்கடிதங்களை தமிழக அரசு சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் சென்று வழங்குவார்கள் என்றும் முதலமைச்சர் அறிவித்திருக்கிறார்.

தமிழக சட்டமன்றத்தில் ஏ.கே. ராஜன் குழு பரிந்துரை அடிப்படையில் மசோதா ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. மசோதா சட்டமாவதற்கு ஆளுநர் ஒப்புதல் வேண்டும். அந்த ஒப்புதல் கிடைக்குமா, இல்லையா என்ற கேள்விக்குறி இருக்கவே செய்கிறது. அதே நேரத்தில் பல்வேறு மாநிலங்களிலும் இந்த சமூக நீதிக் குரல் கூட்டாட்சிக் கண்ணோட்டத்தோடு வலியுறுத்தப்படுமானால் கோரிக்கை மேலும் அழுத்தமடைந்து ஒன்றிய அரசை அசைய வைக்கும் வாய்ப்புகளை உருவாக்கக் கூடும்.

86,342 பேரிடம் கருத்துகளைக் கேட்ட ஏ.கே. ராஜன் குழு நீட் தேர்வில் கிராமப்புற மாணவர்கள் படிப்பு (11.45 சதவீதத்திலிருந்து 50.81 சதவீதத்துக்கு வீழ்ச்சி); அரசுப் பள்ளி மாணவர்கள் மருத்துவப் படிப்பில் சேருவதில் ஏற்பட்ட வீழ்ச்சி (1.12 சதவீதத்திலிருந்து 0.62 சதவீதம்); ஆங்கிலம் வழிப் படித்தவர்கள் சேர்க்கை வீதம் அதிகரிப்பு (85.12லிருந்து 98.01 சதவீதம்); சி.பி.எஸ்.ஈ. பாடத் திட்டத்தில் படித்தவர்களுக்கு கிடைக்கும் கூடுதல் வாய்ப்புகள், பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள ஏழை மாணவர்களிடம் உருவாக்கிய பாதிப்பு (47.42லிருந்து 41.05 ஆக வீழ்ச்சி) போன்ற பல்வேறு கண்ணோட்டத்தில் ஆய்வு செய்திருக்கிறது.

‘நீட்’ பயிற்சி வகுப்புகளுக்கு பல இலட்சம் செலவிடக் கூடியவர்களும் அதற்காக இரண்டு ஆண்டுகள் வரை படிப்பைத் தொடராமல் பயிற்சி எடுத்தவர்கள் மட்டுமே வெற்றி பெற முடிகிறது என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. இத்தனை தடைகளையும் முட்டுக்கட்டைகளையும் உருவாக்கி வரும் இந்தப் போட்டித் தேர்வு, மருத்துவக் கல்வியின் ‘தரத்தை’ எப்படி உயர்த்தும் என்ற கேள்விக்கு ‘நீட்’ ஆதரவாளர்களிடம் பதில் இல்லை. இதைத் தவிர, தேர்வு எழுதுவதில் ஆள் மாறாட்டங்கள் மதிப்பெண் போடுவதில் நடக்கும் கணினி மோசடிகளும் அம்பலமாகி வருகின்றன. சமமானவர்களிடம் சமமான போட்டி முறைகளை நடத்துவதே அரசியல் சட்டம் வலியுறுத்தும் 14ஆவது பிரிவின் சம உரிமைக் கோட்பாடு. சமமான நிலையில் இல்லாதவர்களிடையே போட்டியை மட்டும் சமமாக நடத்துவது என்பது சமத்துவத்துக்கு நேர் முரணானது. தேர்வு முறையை சமமாக நடத்துகிறோம் என்று வாதிடுகிறவர்கள், அந்தத் தேர்வை சந்திப்பவர்களிடம் உள்ள பாகுபாடுகளைக் கவனத்தில் கொண்டிருக்கிறார்களா? நீதிமன்றம் சட்டத்தின் பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருக்கிறதே தவிர சமூக யதார்த்தத்தைப் பார்க்கவே மறுக்கிறது.

‘தகுதித் தேர்வு’கள் தரமான கல்வியை உறுதி செய்கின்றன என்ற கருத்தை அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளே மறு ஆய்வு செய்யத் தொடங்கிவிட்டன. போட்டித் தேர்வுகளால் பெரும் பணக்காரர்கள் அரசியல் செல்வாக்குள்ளவர்கள் பெரும் பயனடைகிறார்கள் என்றும், ஒப்பீட்டளவில் ஏழைகள், மைனாரிட்டி இனத்தவர், பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்றும் பல்வேறு ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளன. அதற்குப் பிறகு பின்தங்கியுள்ள சமூகங்களை கவனத்தில் கொண்டு அவர்களைப் பாதிக்காத தேர்வு முறைகள் அந்நாட்டில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இது குறித்து 2003ஆம் ஆண்டு அமெரிக்க நீதிமன்றம் வழங்கிய கிரட்டர் (Grutter) வழக்கு தீர்ப்பு மிகப் பெரும் திருப்பு முனையை உருவாக்கியது.

போட்டித் தேர்வு, நுழைவுத் தேர்வுகள், ஒடுக்கப்பட்ட சமூக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான தடைகள் என்பது மட்டுமல்ல; ‘பார்ப்பனிய மேட்டிமை’யை கல்வியின் பண்பாடாக மாற்றும் சமூக நீதிக்கான எதிர்க் கருத்தியல். இத்தகைய ‘மேட்டிமைப் பண்பாட்டுச் சூழலில்’ பார்ப்பனிய குணாம்சத்தோடு படித்து வரும் மருத்துவக் கல்லூரி மாணவர்கள், கிராமங்களில் வறுமை நிலையில் உழன்று கொண்டிருக்கும் மக்களுக்கு அர்ப்பணிப்புடன் மருத்துவ சேவை செய்ய முன் வருவார்களா? அல்லது தங்களது எதிர்கால சமூக பொருளியல் வளர்ச்சிக்கான போட்டிக் களத்தில் மூழ்கிக் கிடப்பார்களா? இது ஒரு முக்கிய கேள்வி.

ஒரு மருத்துவ மாணவருக்கான தகுதி என்பது மருத்துவம் பார்க்க வரும் ஏழை எளிய மக்கள் மீதான கவலை, சேவை செய்யும் ஆர்வம் - அர்ப்பணிப்பு என்பதில் அடங்கியிருக்கிறதே தவிர, ‘நீட்’டில் வாங்கும் மதிப்பெண் தர வரிசையில் அல்ல; இந்த சமூக நீதிக்கான உணர்வுகளை ஊட்டி, அதை தமிழ்நாட்டில் சமூகத்தின் பொதுக் கருத்தியலாக மாற்றி அமைத்ததில் பெரும் வெற்றியைப் பெற்றதுதான் திராவிட இயக்கம். அந்த உணர்வு தான் தமிழக முதல்வரை இந்த முனைப்பான செயல்பாடுகளுக்கு உந்து விசையாக இயக்கிக் கொண்டிருக்கிறது.

# கோவை சின்னியம்பாளையத்தில் முதல் சுயமரியாதைத் திருமணம்



கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் - சூலூர் சீ.கார்த்திகேயன் - ந. நாகலட்சுமி இணையரின் மகள் கா.நா. ஓவியா, எம்.ஈ., - சின்னியம்பாளையம் ம.செல்வராஜ் - செ.பத்மாவதி இணையரின் மகன் செ. சரவணக்குமார், பி.ஏ., பி.எல். ஆகியோருக்கு வாழ்க்கை இணையேற்பு விழா 12.09.2021 ஞாயிறு காலை 10 மணிக்கு, கோவை பாப்பம்பட்டி பிரிவு, புளோரா பார்க் இன் ஹோட்டலில் நடைபெற்றது. இது ஜாதி மறுப்பு, சடங்கு மறுப்புத் திருமணமும் ஆகும்.

பாபு துவக்கவுரையாற்றினார். சின்னியம்பாளையம் சிவா வரவேற்புரையாற்றினார். மாநில பொருளாளர் துரைசாமி இணையேற்பு விழாவிற்கு தலைமை தாங்கினார். முதுபெரும் பெரியார் தொண்டர் வசந்தம் ராமச்சந்திரன் முன்னிலை வகித்தார்.

வாழ்த்துரை வழங்கியவர்கள்: வழக்கறிஞர் கார்க்கி (சமத்துவ நீதி கட்சி), வழக்கறிஞர் மனோகர், மதுரை, பாலகிருஷ்ணன் (சிபிஅய் ஒன்றிய செயலாளர்), மேட்டுப்பாளையம் இராமசந்திரன் (கோவை மாவட்ட கழகத் தலைவர்), முகில்ராசு (திருப்பூர் மாவட்டக் கழகத் தலைவர்) - ஆசிரியர் வீ.சிவகாமி (தலைவர், தமிழ்நாடு அறிவியல் மன்றம்), சூலூர் பன்னீர் செல்வம் (தலைமைக் குழு உறுப்பினர்).

இணையேற்பு விழாவில் திவிக பொறுப்பாளர்கள், தோழர்கள், நண்பர்கள், உறவினர்கள் என திரளானோர் கலந்து கொண்டனர். விழாவின் ஒருங்கிணைப்புப் பணிகளை திவிக சூலூர் ஒன்றிய பொறுப்பாளர் பாபு, சாந்தி, சூலூர் தமிழ்ச்செல்வி ஆகியோர் மேற்கொண்டனர். நிறைவாக ந.நாகலட்சுமி நன்றியுரையாற்றினார்.

# கலைவாணி – பாலசுப்ரமணி வாழ்க்கை இணையேற்பு விழா

திருப்பூர் பொங்குபாளையத்தில் கழகத் தோழர் முத்துவின் பெரியார் இல்லத்தில் 16.09.2021 வியாழன் 11.00 மணியளவில் இணையேற்பு விழா நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையேற்று இணையேற்பை நடத்தி வைத்தார். திவிக மாவட்ட தலைவர் முகில்ராசு வரவேற்புரையாற்றினார். கழகப் பொருளாளர் சு.துரைசாமி வாழ்த்துரை வழங்கினார். வசந்தி நன்றியுரையாற்றினார்.

இந்நிகழ்வில் திவிக ஈரோடு மாவட்டச் செயலாளர் யாழ் எழில், திமுக மாவட்ட தொழிற் சங்கத் தலைவர் ரத்தினசாமி, கழக சமூக ஊடகப் பொறுப்பாளர் பரிமளராசன், கழகப் பொறுப்பாளர்கள், தோழர்கள், நண்பர்கள் உறவினர்கள் திரளாக பங்கேற்றனர்.

# கழக முன்னோடிகள் படத்திறப்பு – கருத்தரங்கம்

மறைந்த முன்னோடி தோழர்கள் உடுமலை சு.தெண்டபாணி, மடத்துக்குளம் இரா.மோகன் படத்திறப்பு - கருத்தரங்கம், 26.09.2021 ஞாயிறு மாலை 5 மணியளவில் உடுமலை, நகராட்சி மண்டபத்தில் தேஜஸ் மஹாலில் நடைபெற்றது. உடுமலை முற்போக்காளர்கள் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஜா.சாதிக்பாட்சா தலைமை தாங்கினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

மேலும், திமுக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் மாநிலச் செயலாளர் பொள்ளாச்சி மா.உமாபதி, நாடாளுமன்ற உறுப்பினர் கு. சண்முகசுந்தரம், மு. செந்தமிழ் செல்வன், காசுநாகராசன் ஆகியோரும் உரையாற்றினர்.

தோழமை அமைப்புகளின் தலைவர்கள், தோழர்கள் திரளாகப் பங்கேற்று மறைந்த தோழர்களின் நினைவுகளைப் பகிர்ந்தனர். திராவிடர் விடுதலைக் கழக உடுமலை நகர செயலாளர் இயல் நன்றியுரையாற்றினார்.

நிகழ்வில் கழகப் பொருளாளர் துரைசாமி, உடுமலை திவிக தோழர்கள் சிவானந்தம், கணக்கன், ராஜேந்திரன், திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில் ராசு, அய்யப்பன், கோவை மாவட்டச் செயலாளர் பொள்ளாச்சி வெள்ளிங்கிரி, ஆனந்த், தமிழ்நாடு மாணவர் கழக சந்தோஷ், சபரிகிரி உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். உடுமலை வட்ட முற்போக்காளர் கூட்டமைப்பு நிகழ்வை ஏற்பாடு செய்தது.

## நான் தேசாபிமானியல்ல



நான் ஒரு தேசாபிமானியல்லன்; அது மாத்திரமல்ல; தேசாபிமானத்தை புரட்டு என்றும் அது தனிப்பட்டவர்களின் வயிற்றுச் சோற்று வியாபாரம் என்றும் சொல்லியும், எழுதியும் வரும் ‘தேசத் துரோகி’ யாவேன். ஒரு காலத்தில் தேசாபிமானத்துக்காகச் சிறை செல்லும்படியான அவ்வளவு தேசாபிமானியாய் இருந்து பலமுறை சிறை சென்று வந்து தான் அதன் அனுபவத்தைச் சொல்லுகிறேனே ஒழிய, வெளியில் இருந்து வேடிக்கை மட்டும் பார்த்துவிட்டு நான் இப்படிச் சொல்லவில்லை.

இதனால் பாமர மக்கள் தூஷணைக்கும், பழிப்புக்கும்கூட ஆளாகியிருக்கிறேன், என்றாலும் எனது உறுதியான எண்ணத்தை நான் மாற்றிக்கொள்ள முடியவில்லை.

‘நாட்டுக்கு நல்ல துரை வந்தாலும் தோட்டிக்குப் புல் சுமக்கும் வேலை போகாது’ என்பதுதான் தேசாபிமானிகளின், மகாத்மாக்களின் சுயராஜ்ய தர்மமாகும். இந்த சுயராஜ்யம் வருவதைவிட இப்போது இருக்கும் பரராஜ்யமே மேலானது என்பது எனது கருத்து.

கோவை டவுன் ஹாலில் 12.10.1934 இல் சொற்பொழிவு.

## பேராசிரியர் ஜெயராமன் விளக்கம்

# ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டச் சொல்லாக ‘திராவிடம்’ மலர்ந்தது ஏன்?

பேராசிரியர் ஜெயராமன், சென்னையில் பேசியதற்கு மயிலாடுதுறை நாம் தமிழர் கட்சியினர் அவருக்குக் கொலை மிரட்டல் விடுத்திருக்கிறார்கள். திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் ஒருங்கிணைப்பில் தோழமை அமைப்புகளுடன் கண்டன ஆர்ப்பாட்டம் மயிலாடுதுறையில் நடந்திருக்கிறது. விடுதலை சிறுத்தைகள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் எஸ்.டி.பி.அய். அமைப்பினர் பங்கேற்றனர். இத்தனைக்கும் பேராசிரியர் ஜெயராமன் தனது சென்னை உரையில்: “எனக்கு திராவிட தேர்தல் அரசியல் கட்சிகள் மீது கடும் விமர்சனம் இருக்கிறது. பெரியாருடைய மொழிக் கொள்கையை நான் ஏற்கவில்லை; ஆனால் பெரியாருடைய வரலாற்றுப் பங்களிப்பு மகத்தானது; அதை எவரும் புறக்கணித்து விட முடியாது” என்று தனது நிலையில் உறுதியாக இருந்து தான் பேசினார்.

தமிழ்த் தேசியம் என்பது தேர்தல் அரசியலுக்கான பதவியைப் பிடிப்பதற்கான ஆயுதமாகப் பயன்படுத்துவதை நான் கடுமையாக எதிர்க்கிறேன். தமிழ்த் தேச அரசியல் என்பது, “தமிழருடைய முழுமையான இறையாண்மை” என்றும் அவர் விளக்கமளித்தார்.

தமிழ் அறிஞர்களே ‘திராவிடர்’ என்ற சொல்லை ஏற்றுக் கொண்டிருந்ததையும் பேராசிரியர் விளக்கினார். 1800களிலேயே பெரியார், திராவிடர் கழகம் தொடங்குவதற்கு முன்பு பட்டியல் இனப் பிரிவுத் தலைவரான ரெட்டைமலை சீனிவாசன், ‘பறையர் மகாஜன சபை’ தொடங்கி, பிறகு ‘ஆதி திராவிடர் மகாஜன சபை’ என்று பெயர் மாற்றியதையும் மற்றொரு ஒடுக்கப்பட்ட ‘ஆதிதிராவிட’ சமூகத் தலைவரான எம்.சி.ராஜா,1922 ஜனவரி 20இல் அன்றைய சென்னை மாகாண சட்டமன்றத்தில் பறையர், பள்ளர் என்று அழைப்பதை விடுத்து, அவர்களை ‘ஆதி திராவிடர்’ என்று அழைக்க வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றச் செய்ததையும் மிகச் சிறந்த தமிழ் அறிஞரும் சைவ நெறியாளரும் துறவு வாழ்க்கை வாழ்ந்தவருமான திரு.வி.க. (திரு.வி.கல்யாண சுந்தரனார்),ரெட்டைமலை சீனிவாசனுக்கு ‘திராவிட மணி’ என்று பட்டம் வழங்கி பெருமைப் படுத்தியதையும் பேராசிரியர் சுட்டிக்காட்டினார். திரு.வி.க., இதன் வழியாக தமிழர் அடையாளத்தை மறைக்கக முயன்றார் என்று அவரைக் குற்றம்சாட்ட முடியுமா என்று கேள்வி எழுப்பினார்.

1899இல் யாழ்ப்பாணத்து தமிழ் அறிஞர் ‘தமிழ் வரலாறு’ எழுதி அந்த நூலுக்கு ‘திராவிடப் பிரகாசிகை’ என்று பெயர் சூட்டினார். என்ன காரணம்? ‘தமிழ் - திராவிடர்’ இரண்டுமே ஒரே அர்த்தத்தில் இருந்திருக்கிறது என்பது தானே. தமிழுக்கு இரண்டு பெயர்கள் இருந்திருக்கின்றன. ஒன்று - தமிழ்; மற்றொன்று திராவிடம். இந்த நூல் கால்டுவெல் காலத்துக்குப் பிறகு வந்ததாகும்.

கால்டுவெல் தனது நூலில் இரண்டு முக்கிய ஆய்வுகளை முன் வைத்தார். ஒன்று - தென்னாட்டில் பேசக் கூடிய மொழிகள் சமஸ்கிருதத்திலிருந்து பிறந்தவையல்ல; (அதற்கு முன் சமஸ்கிருதமே அத்தனை இந்திய மொழிகளுக்குத் தாய் என்று பார்ப்பனர்கள் கூறி வந்தார்கள்). திராவிடர் என்ற சொல், தென்னாட்டைக் குறிக்கும் சொல். தெலுங்கு, மலையாளம், கன்னட மொழிகளில் சமஸ்கிருதம் பெருமளவில் ஊடுறுவி இருக்கிறது. தமிழ் மொழி மட்டும் சமஸ்கிருதம் இல்லாமலேயே இயங்க முடியும். திராவிட மொழிகளில் முதன்மையானது தமிழ் என்பது அவரது ஆய்வு முடிவு. மற்றொன்று மிகவும் முக்கியமானது. தென்னாட்டுக்கு குடியேறிய வந்தேறிகளான ஆரிய பார்ப்பனர்கள், இங்கே வாழ்ந்த பூர்விகக் குடிகளுக்கு ‘சூத்திரர்’ என்ற பட்டத்தைக் கொடுத்தார்கள் என்றார் கால்டுவெல். இந்த கருத்து தான் வெடிகுண்டாக மாறியது. சமூக விடுதலைக்கு உண்மையான எதிரிகள், ஆரியப் பார்ப்பனர்கள். இவர்களை வீழ்த்த ‘திராவிடர்’ என்பதே சரியான அடையாளம் என்ற முடிவுக்கு ஜாதிய - சமூக ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடிய தலைவர்கள், பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்த தலைவர்கள் உணர்ந்தார்கள். இந்தி பேசுகிறவர்களை ‘இந்தி’யர்கள் என்கிறீர்கள். நாங்கள் - திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த ‘திராவிடர்கள்’ என்று தங்களை அடையாளப்படுத்தத் தொடங்கினர்.

1910இல் ‘திராவிடம்’ என்ற சொல்லை ஆய்வுலகம் ஏற்றுக் கொண்டது மாந்தவியலாளர்கள், வரலாற்று அறிஞர்கள், தொல்லியல் ஆய்வாளர்கள், மொழியியலாளர்கள் அனைவரும் கால்டுவெல் கூறிய ‘திராவிடம்’ கருத்தியலை ஏற்றுக் கொண்டார்கள் என்று விளக்கினார் பேராசிரியர்.



‘தமிழ்நாட்டிலிருந்து சிங்கப்பூர் போய் திரும்பியவர்களை ‘சிங்கப்பூரான்’ என்று அழைப்பது போல் தென்னகத்தில் குடிபுகுந்த பார்ப்பனர்கள், திராவிட பார்ப்பனர்கள் என்று அடையாளப்படுத்தப்பட்டார்கள். திராவிடர்கள் என்றாலே பார்ப்பனர்கள் தான் என்று பேசுவது திரிபுவாதம்’ என்றார் பேராசிரியர்.

தமிழைத் தமிழ் என்று அழைக்கலாம்; தென்னக மொழிக் குடும்பத்தைத் ‘திராவிடம்’ என்று அழைக்கலாம் என்று கூறிய கால்டுவெல் மிகவும் நேர்மையுடன் நான் பரிந்துரைப்பது சரியா, தவறா என்றும் தெரியவில்லை என்று அடக்கத்துடன் கூறுகிறார். ஆரியத்திலிருந்து வேறுபட்டது; சமஸ்கிருதத்தோடு தொடர்பற்றது என்பதே திராவிடத்தின் அடிப்படை. ‘தென்னிந்தியாவை திராவிடர் நாகரிகம் கொண்டவர்கள்’ என்று வரலாற்று ஆசிரியர்களும் தென்னிந்திய மொழிகள் தனித்தனியாக இருந்தாலும் திராவிடர்களுக்கான தொடர்புகளைக் கொண்டவை (Dravidian Interlinked) என்று மொழியிலாளர்களும் ‘திராவிடர் கட்டிடக் கலை’ என்று கட்டிடக் கலை நிபுணர்களும் அடையாளப்படுத்தினார்கள். 1865இல் மாந்தவியல் ஆய்வாளரான ஹக்ஸ்லி, இந்தியாவில் வாழும் ஒரு தனி இனம் தான் திராவிடர்கள் என்று அழைக்கப்படும் மக்கள் என்று தனது நூலில் எழுதி, இந்தக் கருத்துகளைத் தொடங்கி வைத்தார். இதில் பார்ப்பன எதிர்ப்புக் கூறு இருப்பதால், டி.எம்.நாயர், தியாகராயர் போன்ற ஆளுமைகள் பெரியாருக்கு முன்பே ‘திராவிடராக’ அடையாளமாக்கிக் கொண்டார்கள்.

- தென்னாட்டு மக்களுக்கு இங்கு குடியேறிய பார்ப்பனர்கள் ‘சூத்திரர்’ என்ற பட்டத்தை சூட்டியதை கால்ட்வெல் சுட்டிக் காட்டினார்.
- ஒடுக்கப்பட்ட மக்கள் இந்த இழிவை எதிர்க்க தன்மானப் போருக்கு அடையாளமாக்கிக் கொண்டதுதான் ‘திராவிடர்’ என்ற அடையாளம்.
- பார்ப்பனியம் திணித்த அடிமைத்தனத்தை ஏற்றுக் கொண்டதால்தான், பிற மாநிலத்தவர் ‘திராவிடர்’ என்பதை ஏற்கவில்லை.

‘திராவிடன்’ என்ற சொல்லை கன்னடன், மலையாளி, தெலுங்கர்கள் பயன்படுத்தாதபோது தமிழன் மட்டும் தூக்கி சுமக்க வேண்டுமா என்ற கேள்விக்கும் பதிலளித்த பேராசிரியர் ஜெயராமன், “திராவிடன் என்பது மானத்தைக் காப்பாற்ற கோவணம் கட்டுவதுபோல; அவர்களுக்கு எல்லாம் நிர்வாணமாக இருப்பதில் வெட்கமில்லை; பார்ப்பனியத்தை நாங்கள் எதிர்க்க மாட்டோம்; அது தெய்வக் குற்றமாகிவிடும். நாங்கள் நிர்வாணமாகத் திரிவதில் நோக்கு என்ன ஆட்சேபணை? நாங்கள் எல்லாம் பிராமணர்களை எதிர்க்க மாட்டோம்; அவாள் தான் எங்களுக்கு கடவுள்; எங்கள் வீட்டு மூத்த மகன் நம்பூதிரிக்குப் பிறந்தவன்; எங்கள் சமூகத்தில் ஏராளமானவர்கள் நம்பூதிரிக்குப் பிறந்தவர்களாக்கும். நாங்கள் ஏன் திராவிடத்தைப் பேசணும்?” என்பதே அவர்களின் சிந்தனை. அதனால் அவர்கள் திராவிடத்தை ஏற்க மறுக்கிறார்கள். மற்றொன்று தமிழ் மட்டும் தான் தனித்து இயங்கும். அது தான் வளமான மொழி என்று கால்டுவெல் கூறி எங்களை இழிவுபடுத்திய பிறகு நாங்கள் எப்படி அதை ஏற்போம்? எனவே எங்களுக்கு திராவிடம் வேண்டாம் என்கிறார்கள். பார்ப்பனிய அடிமைச் சிந்தனையில் மூழ்கிக் கிடப்பவர்கள். எனவே திராவிடத்தை ஏற்க மறுக்கிறவர்கள். ‘திராவிட’ என்ற வார்த்தையை வரலாறு தெரிந்தால் தான் புரிந்து கொள்ளவே முடியும் என்றார் பேராசிரியர்.

இறுதியில் அவர் தனது உரையை இவ்வாறு முடித்தார்.

“தற்போது, மிகவும் ஆபத்தான ஒரு கால கட்டத்தில் இருக்கிறோம். எதிரி முன்பை விட தற்போது வலுவாக இருக்கிறான். ஆமையின் ஓட்டை எடுத்துவிட்டால் அது எண்ணெய் சட்டியில் தான், அதே போல தான் நத்தையின் ஓடும். அதுபோல தான் திராவிடம் என்பது நமது பாதுகாப்பு. திராவிடம் என்ற சொல்லை இழிவுபடுத்துவது, இந்த மக்களின் சமூக மேம்பாட்டுக்காக இருக்கும் பாதுகாப்புகளை தமிழ்த் தேசியம் என்ற பெயரில் அழித்துவிடக் கூடாது. தமிழ்த் தேசியம் பேசும் அனைவருக்கும் ஒன்று கூறுகிறேன். விடுதலைக் கருத்தியலாக இருக்கும் வரை தான் அது தமிழ்த் தேசியம். இந்தியத்திற்கு இணங்கி, மாநில அளவில் அரசியல் செய்ய வந்து விட்டால் அது தமிழ்த் தேச அரசியல் அல்ல. தமிழ்த் தேசியத்திற்கு ஒரே இலக்கு தான் உண்டு; இறையாண்மை உள்ள தேசியத்தை படைத்துக் கொள்வது. இந்த இலக்கு இருந்தால் தான் அது தமிழ்த் தேசியம். இந்தியா என்பது பெரிய இயந்திரம் போல, மாநிலங்கள் என்பது அதில் சுழலும் பல் சக்கரங்களைப் போன்றவை. இந்தியா என்ற இயந்திரம் எந்தத் திசையில் சுழலுமோ அந்த திசையில் தான் சுழல முடியும், இல்லை இல்லை நான் தேர்தலில் வெற்றி பெற்று எதிர்த்திசையில் சுழலுவேன் என்றால் கழட்டி காயலாங்கடையில் போட்டு விடுவார்கள். இதை கூறும்போது மற்றொன்றையும் கூறிவிட வேண்டும். இந்திய குடிமகனாக இருக்கும் யார் வேண்டுமானாலும் தேர்தலில் போட்டியிட்டு முதலமைச்சராக வரலாம். இவர்கள் தான் வர வேண்டும். என்ற எந்த வரையறையும் கிடையாது. ஆனால் அது தமிழ்த் தேசியம் என்ற பெயரில் அதைச் செய்யக் கூடாது” என்றார்.

(நிறைவு)

**பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து பா.ஜ.க. ஆட்சி வரை – கட்டுரை அடுத்த இதழில் தொடரும்**

## ‘நாம் தமிழர் கட்சி’ கொலை மிரட்டலைக் கண்டித்து கழகம் ஆர்ப்பாட்டம்




மீத்தேன் திட்ட எதிர்ப்பு கூட்டமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ஜெயராமனை முகநூலில் மிக இழிவாக எழுதியும், அவரது அமைப்பு தோழரின் கடைக்கு நேரடியாக சென்று அவர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்தும், பேராசிரியர் ஜெயராமனுக்கும் கொலை மிரட்டல் விடுத்த நாம் தமிழர் கட்சியினரின் அராஜக போக்கினைக் கண்டித்தும், நாம் தமிழர் கட்சியினர் கொடுத்த பொய் புகாரில் கொலை மிரட்டலுக்கு ஆளான பேராசிரியர் ஜெயராமன் மீதே பொய் வழக்கு போட்ட மயிலாடுதுறை மாவட்ட காவல்துறையைக் கண்டித்தும், கொலை மிரட்டல் விடுத்த நாம் தமிழர் கட்சியின் பொறுப்பாளர்களை உடனடியாக கைது செய்யக் கோரியும் மயிலாடுதுறையில் 30.9.2021 அன்று மாலை 4.00 மணியளவில் கிட்டப்பா அங்காடி அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி, சோசியல் டெமாக்ரடிக் பார்ட்டி ஆப் இந்தியா, பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியா, மனிதநேய மக்கள் கட்சி, தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம், தந்தை பெரியார் திராவிடர் கழகம், திராவிடர் விடுதலைக் கழகம், தமிழர் உரிமை இயக்கம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட்) விடுதலை,மக்கள் அதிகாரம், ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம், மே–17, உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு நாம் தமிழர் கட்சியின் அராஜக போக்கைக் கண்டித்தும், மயிலாடுதுறை மாவட்ட காவல்துறையை கண்டித்தும் கண்டன உரை நிகழ்த்தினர். அனைத்துக் கட்சிகள், அமைப்புகளைச் சார்ந்த தோழர்கள் திரளாகக் கலந்து கொண்டு தங்களது ஆதரவை தெரிவித்தனர்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# குழப்பவாதிகளின் கேள்விகளுக்கு வாலாஜா வல்லவன் வரலாற்றுப்பூர்வ மறுப்பு



திராவிட எதிர்ப்பு என்பதே அனைத்துப் பிரச்சினைகளுக்கும் 'ஒற்றைத் தீர்வு' என்று நிழல் யுத்தம் ஒன்றை நடத்திக் கொண்டிருக்கிறார்கள், தோழர்கள் மணியரசனும் (தமிழ் தேச பேரியக்கம்), சீமானும் (நாம் தமிழர் கட்சி). இதற்கு தமிழர் 'மெய்யியல்', 'அறம்' என்றெல்லாம் உள்ளடக்க விளக்கம் ஏதுமற்ற 'சொல்லாடல்களை' போர்த்திக் கொண்டு தத்துவமளிக்கும் முயற்சிகள் வேறு நடக்கின்றன.

19.9.2021 அன்று கருத்தரங்கில் 'திராவிட எதிர்ப்பு' கூச்சலுக்கு ஆழமான எதிர்வினைகள் வரலாற்று தரவுகளோடு முன் வைத்து பல சிந்தனையாளர்கள் உரையாற்றினார்கள். அதன் மய்யமான கருத்துத் தொகுப்புகளை சுருக்கமாக இளைய தலைமுறையின் சிந்தனைக்கு 'புரட்சிப் பெரியார் முழக்கம்' சிறு சிறு பகுதிகளாகத் தொடர்ந்து வெளியிட இருக்கிறது.

மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமை கட்சியின் தோழரும் பெரியாரிய ஆய்வாளருமான வாலாஜா வல்லவன் நிகழ்த்திய உரையிலிருந்து சில வரலாற்றுச் செய்திகளை தேர்வு செய்து இங்கே தொகுத்து தருகிறோம்.

**திராவிட இயக்கம் கேட்டது கேரளம் - ஆந்திரா - கருநாடகா - தமிழ் நாட்டை ஒரே பிரதேசமாக்கும் திராவிட நாடா?**

1. அப்படிக் கூறுவது அபத்தம், வரலாற்றுப் புரட்டு. நீதிக் கட்சி முன்னோடிகளில் ஒருவரான டி.எம். நாயர், தென்னிந்திய நான்கு மாநிலங்களையும் தனித் தனி நாடுகளாக அங்கீகரிக்கும் கூட்டாட்சி ஒன்றை உருவாக்க வேண்டும் என்றே வற்புறுத்தினார். 'ஜஸ்டிஸ்', 'திராவிடன்' ஏடுகளில் இது குறித்து விரிவாக எழுதியிருக்கிறார்.

2. தி.மு.க. கேட்ட 'திராவிட நாடு' என்பதும், நான்கு மாநிலங்களையும் உள்ளடக்கிய 'திராவிடக் கூட்டாட்சி'யைத்தான். 1944இல் தி.மு.க.வுக்கு சூட்டப்பட்ட பெயரே (திராவிட முற்போக்குக் கூட்டமைப்பு கழகம்' (Dravidian Progressive Federation) என்பதாகும். அப்படித் தான் தி.மு.க. சட்டப் புத்தகத்திலும் பதிவு செய்யப்பட்டது. பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் என்று மாற்றப்பட்டது. அதில் 'முன்னேற்றம்' என்பது 'மேம்பாடு' என்ற பொருளில் அல்ல; 'முற்போக்கு' என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டது.

**நீதிக்கட்சி, தமிழரை - தமிழைப் புறக்கணித்து தெலுங்கர்களுக்கு - தெலுங்குக்கு ஆதரவாகவே செயல்பட்டதா?**

1. புரட்டுவாதம் 1928இல் நீதிக்கட்சி தான் தமிழ் அகராதியை (லெக்சிகன்) வெளியிட்டது.

2. 1925ஆம் ஆண்டு வரை சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் புலவர் பட்டம் பெற வேண்டுமானால் கட்டாயம் சமஸ்கிருதம் தெரிந்திருக்க வேண்டும் என்ற நிலையை உருவாக்கினார்கள். நீதிக்கட்சியின் முதல்வரான பனகல் அரசர் தான், புலவர் படிப்புக்கு சமஸ்கிருதம் தேவை இல்லை என்ற உத்தரவைப் பிறப்பித்தார். மறைமலையடிகள் பேரன் சாரதா நம்பியூரான் முனைவர் பட்ட ஆய்வு நூலில் இதை விரிவாகப் பதிவு செய்துள்ளார். தனது முனைவர் பட்ட ஆய்வை அவர் இலண்டன் பல்கலைக்கழகத்தில் சமர்ப்பித்தார். அந்த ஆய்வு, திருநாவுக்கரசு, 'நம்நாடு' முத்துகிருட்டிணன் ஆகியோரின் மொழி பெயர்ப்பில் தமிழில் வெளி வந்திருக்கிறது.

3. சைவ நெறியைப் போற்றியவரும் தனித் தமிழ் இயக்கத்தை நடத்தியவருமான மறைமலையடிகள் எழுதிய 'அறிவுரைக் கொத்து' நூல் சென்னை பல்கலைக் கழகத்தில் பாடமாக வைக்கப்பட்டிருந்தது. அதற்கு பார்ப்பனர்களிடமிருந்து எதிர்ப்பு வந்தபோது நூல் தடை செய்யப்பட்டது. பெரியார் மறைமலையடிகளாருக்கு இடையே 'சைவம்' குறித்து முரண்பாடுகள் இருந்த நிலையில், பெரியார், மறைமலை அடிகளார் பக்கம் நின்று நூல் தடை செய்ததை எதிர்த்து, அதை இயக்கமாக்கினார். நாடு முழுதும் உள்ள சுயமரியாதை இயக்கங்கள் 'அறிவுரைக் கொத்து'த் தடைக்கு எதிராகக் கண்டனத் தீர்மானங்களைப் போட வேண்டுகோள் விடுத்தார். கண்டனங்கள் குவிந்தன (1935 'குடிஅரசு', இந்த செய்திகளை பதிவு செய்திருக்கிறது).

4. மறைமலை அடிகள், 1902இல் இதழ் தொடங்கி, 1916இல் தனித் தமிழ் இயக்கத்தைத் தொடங்கினாலும் 1920க்குப் பிறகு தான் அந்த இயக்கம் வளரத் தொடங்கியது. அதற்குக் காரணம், 1916இல் தொடங்கிய பார்ப்பனரல்லாதார் இயக்கம் உருவாக்கிய தாக்கம் தான் என்று சாரதா நம்பியூரான், தனது முனைவர் பட்ட ஆய்வில் விளக்குகிறார். பார்ப்பனரல்லாதார் இயக்கம் ஊட்டிய உணர்வே வடமொழி எதிர்ப்பு இயக்கத்துக்கு உரமூட்டியது.

**இந்தி எதிர்ப்பு - மக்கள் இயக்கமாக்கியது யார்?**

இந்தி எதிர்ப்பு இயக்கத்தை மறைமலை அடிகள், சோமசுந்தர பாரதியார் போன்ற தமிழறிஞர்கள்தான் தொடங்கினார்கள். பெரியார் இடையில் வந்து புகுந்து கொண்டார் என்று பெ. மணியரசன் பேசுவது சரியா?

1. இது, கலப்படமற்ற பொய். 1926ஆம் ஆண்டிலேயே இந்தியை எதிர்த்து பெரியார், 'குடிஅரசு' ஏட்டில் எழுதினார். 1931இல் நன்னிலம் என்ற தஞ்சை மாவட்டத்திலுள்ள ஊரில் இந்தியை எதிர்த்துப் பேசினார். 1930இல் வன்னியர் சங்க மாநாட்டில் பேசிய பெரியார், "இந்தியா ஒரு நேஷனா? (நாடா?)" என்ற கேள்வியை எழுப்பி இந்தியை எதிர்த்தார். (1.6.1931 'குடிஅரசு' இதழில் இந்தப் பேச்சு வெளி வந்திருக்கிறது)

2. 1938இல் இராஜகோபாலாச்சாரி பள்ளிகளில் கட்டாய இந்தித் திணிப்பைக் கொண்டு வந்தபோது தமிழ்நாட்டில் மக்கள் போராட்டம் வெடித்தது. ஓராண்டு காலம் பெரியார் போராடினார். 1938 ஆகஸ்ட் மாதம் திருச்சியிலிருந்து பெரியார் இயக்க சார்பில், பட்டுக்கோட்டை அழகிரியைத் தளபதியாகக் கொண்டு மூவலூர் இராமாமிர்தத்தம்மையார் உள்ளிட்ட 102 பேர் பங்கேற்ற இந்தி எதிர்ப்புப் படை சென்னை நோக்கி புறப்பட்டது. 42 நாட்கள் நடந்தே சென்னை வந்தனர். அது கடுமையான மழைக் காலம். இரண்டு இடங்களில் கழுத்தளவு வெள்ளத்தில் நீந்தி ஆற்றைக் கடந்து படை நகர்ந்தது. பகல் முழுதும் கிராமங்களில் பிரச்சாரம் மாலையில் பொதுக் கூட்டம் படையை திருச்சியிலிருந்து வழியனுப்பி வைக்கும் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தவர் கி.ஆ.பெ. விசுவநாதம் மற்றும் பெரியார் தொண்டர் தி.பொ. வேதாசலம்.

3. சென்னை கடற்கரையில் ஒன்றரை இலட்சம் மக்கள் கூடிய இந்தி எதிர்ப்புக் கூட்டத்துக்கு படை வந்து சேர்ந்தது. 11.9.1938இல் நடந்த அந்தக் கூட்டத்தின் தலைவர் மறைமலை அடிகள், நாவலர் சோமசுந்தர பாரதியார் - வரவேற்புரை. நிறைவுரையாற்றியவர் பெரியார். அடுத்தக்கட்டத்தில் மறைமலை அடிகள், நாவலர் சோமசுந்தர பாரதியார், பெரியார் - தமிழ்நாடு தமிழருக்கே என்ற முழக்கத்தை முன் வைத்தனர்.

4. பெரியார் இந்தி எதிர்ப்பை முன்னெடுக்கவில்லை என்றும் தமிழ் அறிஞர்கள் தான் முன்னெடுத்தனர் என்றும் மணியரசன் பேசுகிறார். அவரிடம் கேட்கிறேன், அந்த ஒரு கூட்டத்துக்குப் பிறகு அடுத்த 40 ஆண்டுகள் வரை மறைமலையடிகள் ஒரு முறைகூட தமிழ்நாடு தமிழருக்கே எனும் முழக்கத்தை முன் வைத்ததே இல்லை. அப்படிப் பேசினார் என்பதற்கு உங்களால் ஆதாரம் காட்ட முடியுமா?

- அந்தப் போராட்டத்தில் மறைமலை அடிகளையோ நாவலரையோ அன்றைய இராஜகோபாலாச்சாரி கைது செய்யவில்லை. பெரியாரைத் தான் கைது செய்தது. பெண்கள் மாநாடு நடத்தி இந்தி எதிர்ப்புக்காகப் பெண்களை தூண்டி விட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ் 3 ஆண்டுகள் தண்டிக்கப்பட்டார். தமிழ் நாட்டு சிறையில் வைத்தால் தமிழர்கள் சந்திப்பார்கள் என்பதற்காக பெல்லாரி சிறையில் பெரியாரை அடைக்க இராஜகோபாலாச்சாரி உத்தரவிட்டார்.
- இந்தி எதிர்ப்புக்காக அன்றைய இராஜகோபாலாச்சாரி ஆட்சி, பெரியாரை பழி வாங்கத் துடித்தது. அப்போது நீதிக்கட்சித் தலைவராக இருந்த பொப்பிலி அரசர், தென்னாப்பிரிக்க நாடுகளில் சுற்றுப் பயணம் செய்து விட்டு சென்னை திரும்பிய நிலையில் ஆச்சாரியார் அவரை அழைத்து நீதிக்கட்சித் தலைவர் பதவியிலிருந்து 'இராஜினாமா செய்; இல்லாவிட்டால் ஜமீன்தார் ஒழிப்புச் சட்டம் கொண்டு வந்து, சொத்துகளைப் பறி முதல் செய்வேன்' என்று மிரட்டினார். ஜமீன்தார்கள் அனைவரும் பொப்பிலி அரசனிடம் சென்று பதவி விலகி விடுங்கள் என்று மன்றாடினர். பொப்பிலி அரசர், நீதிக்கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகினார். நீதிக்கட்சி தலைவர் இல்லாத கட்சியாகவே இருந்தது.
- அந்த நெருக்கடியான காலகட்டத்தில் பெரியார் தான் கட்சித் தலைவராக இருக்க வேண்டும். அதற்கு அவரை வலியுறுத்தி ஏற்கச் செய்ய வேண்டும் என்று இரண்டு தலைவர்கள் பெல்லாரி சிறைக்குப் போய் பெரியாரைச் சந்திக்கிறார்கள். ஒருவர் சர். ஏ.டி. பன்னீர் செல்வம் (பார்-அட்-லா படித்த வழக்கறிஞர், சுயமரியாதை இயக்க ஆதரவாளர், மாவட்ட நிர்வாகத் தலைவர் என்ற பதவிகளில் இருந்தவர். இந்தியாவுக்கு பொறுப்பு வகிக்கும் பிரிட்டிஷ் அமைச்சரின் ஆலோசகர் பொறுப்புக்குத் தேர்வாகி, விமானத்தில் இலண்டன் செல்லும்போது விமான விபத்தில் பலியானவர்). மற்றொருவர், கி.ஆ.பெ. விசுவநாதம். பெரியாரை தலைவர் பதவியேற்க சம்மதிக்க வைத்து நீதிக்கட்சி மாநாட்டுக்கு தலைமை உரையையும் பெரியாரிடம் எழுதி வாங்கினார்கள். அந்த உரையின் இறுதி வரியே 'தமிழ்நாடு தமிழருக்கே' என்றுதான் முடியும். இத்தகவல்களை கி.ஆ.பெ. விசுவநாதமே எழுதியுள்ள 'எனது நண்பர்கள்' என்ற நூலில் பதிவு செய்திருக்கிறார்.
- 1938 டிசம்பர் 29இல் சென்னையில் கூடிய நீதிக்கட்சியின் 14ஆவது மாநாட்டில் பெரியார் பெல்லாரி சிறையிலிருந்தபடியே தலைவராக்கப்படுகிறார். பெரியார் சிறையிலிருந்து எழுதித் தந்த உரையே சர்.ஏ.டி. பன்னீர்செல்வம் பாதி உரையையும், கி.ஆ.பெ. விசுவநாதம் பாதி உரையையும் மாநாட்டில் படித்தனர்.

(தொடரும்)

## காமராசர் நினைவு இல்லத்தில் கழகம் மரியாதை



கல்வி வள்ளல் காமராசர் நினைவு நாளையொட்டி அக்.2 அன்று சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் மயிலாப்பூர் பெரியார் படிப்பகம் அருகில் அலங்கரிக்கப்பட்ட காமராசர் படத்துக்கும், தியாகராயர் நகர் - காமராசர் நினைவு இல்லத்திலும் கழக சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் மாலை அணிவித்தார். தலைமைக் குழு உறுப்பினர் தபசி குமரன், அன்பு தனசேகரன், மாவட்ட பொறுப்பாளர்கள் இரா. உமாபதி, வேழவேந்தன், சுகுமார் உள்ளிட்ட சென்னை மாவட்ட கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 7th October 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN